**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 296/2018**

2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 04–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 04.11.2025 | | |
| பெயர்: | அபிபுல்லா<br>(PW– Cross ) | தகப்பனார் பெயர்: | முகமது அலி |
| கிராமம்: | அரசூர் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | | வயது : | 65/2025 |

**<u>1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : 04.11.2025</u>**

**(ஆரம்பித்த நேரம்– 13.22)**

1. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் என்னுடைய சொத்தை 1,2 பிரதிவாதிகள் அபகரிக்க முயன்றதால் இடையூறு செய்யக்கூடாது என வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து தற்போது காலியிடமாக உள்ளது. தாவா சொத்தை மைமூன் பீவி என்பவரிடமிருந்து நான் 06.09.1994ல் வாங்கினேன். தாவா சொத்தின் சர்வே எண் நான் வாங்கும்போது, 152/1A2 ஆகும்.

2. மைமூன் பீவி கிரயம் வாங்கும்போது எவ்வளவு வாங்கினார் என்றால் 120 குழி இருக்கும். மைமூன் பீவி கிரயப்பத்திரப்படி தாவா சொத்தின் சர்வே எண் 152/1A2 ஆகும். மைமூன் பீவி கிரயம் வாங்கும்போது சர்வே எண் 152/1A2 தவிர வேறு சொத்துக்கள் உண்டா என்றால் இன்னொரு சர்வே எண் சொத்து அதில் உள்ளது, அதில் எவ்வளவு செண்ட் உள்ளது என்று தெரியாது. மைமூன் பீவி, சாரா பேகத்திற்கு எவ்வளவு நிலம் விற்பனை செய்தார் என்றால் 80 குழி விற்பனை செய்தார்.

3. மைமூன் பீவி, சாரா பேகத்திற்கு 27 செண்ட் நிலம் விற்பனை செய்தார் என்றால் சரிதான், ஆனால் செண்ட், குழி கணக்கு பற்றி எனக்கு அவ்வளவாக தெரியாது. தாவா சொத்து என்பது சீர்காழி–சிதம்பரம் புறவழிச்சாலையில் உள்ளது என்றால் சரிதான். சீர்காழியிலிருந்து சிதம்பரம் செல்லும் புறவழிச்சாலையில் வலது பக்கத்தில் தாவா சொத்து உள்ளது. மைமூன் பீவி எனக்கு விற்றதுபோல் 1ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான்.

4. மைமூன் பீவி, ஜாகிர் உசைன் என்பவருக்கு கிரய ஆவணம் எழுதிக்கொடுத்தது பற்றி எனக்கு தெரியாது. ஜாகிர் உசைன் தில்ஷாத் பேகத்திற்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்தது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண் 152/1A2ன் மொத்த திட்ட விஸ்தீரணம் என்பது 120 ½ குழியாகும். மொத்த 120 ½ குழியில் எனக்கு விற்ற 13 1/3 செண்ட் தவிர மற்ற இடங்கள் யார் யார் பெயரில் விற்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் முதலில் சாரா பேகத்திடம் விற்பனை செய்யப்பட்டது, அதன்பிறகு சாரா பேகம் மேலும் இரண்டு பேரிடம் விற்பனை செய்துவிட்டார். அவர்கள் யார் என்றால் தரூஸ் கனி, மும்தாஜ் பேகம், ரஷீதா பேகம்.

5. அந்த 3 நபர்களிடம் எவ்வளவு அளவு, விஸ்தீரணத்தில் விற்பனை செய்யப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் தாவா சொத்தை 1994ம் வருடம் வாங்கிய பிறகு கட்டுமான பணி எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தில் 3,4 பிரதிவாதிகள் 4 வழி சாலையமைக்க உத்தேசிக்கப்பட்டது என்பது சம்மந்தமாக ஆவணங்கள் ஏதும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

6. அதன்படி தாவா சொத்தில் 38 ச.மீ, 3,4 பிரதிவாதிகள் கையகப்படுத்தினார்கள், அதற்கு இழப்பீடும் நான் பெற்றுக்கொண்டேன். கையகப்படுத்தி இழப்பீடு பெற்று கொண்டதற்கான ஆவணங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். 38 ச.மீ போக தாவா புல எண்ணில் எவ்வளவு மீதம் உள்ளது என்றால் எனக்கு சரியாக கணக்கு தெரியவில்லை.

ஆனால் சுமாராக 5000க்கும் கூடுதலான சதுரடிகள் இருக்கலாம். தாவா சொத்தில் 5000க்கும் கூடுதலான சதுரடிகள் எனக்கு பாக்கி இருக்கலாம் என்பதற்கு ஆதரவாக ஆவணங்கள் தாக்கல் செய்ய முடியும்.

7. நெடுஞ்சாலைத்துறையில் பணிகள் மேற்கொள்ளும்போது, எவ்வளவு நிலம் எடுக்கப்படுகிறது என்பது குறித்த அளவுகளும் அதற்கான வரைபடங்களும் நெடுஞ்சாலைத்துறை அலுவலகத்தில் இருக்கும் என்றால் சரிதான். எவ்வளவு நிலம் எடுக்கப்பட்டது என்பது குறித்த ஆவணங்கள் என்னிடம் உள்ளதா என்றால் ஞாபகமில்லை. அந்த ஆவணங்கள் என்னிடம் இல்லை என்றாலும் நெடுஞ்சாலைத்துறையிடமிருந்து பெற்று நான் இந்த வழக்கில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என்றால் சரிதான்.

8. வா.சா.ஆ.6 ஆவணம் என்பது எனக்கு வந்த அறிவிப்பா என்றால் சரிதான், எனக்கும் அறிவிப்பு வந்தது. சர்வே எண் 152/1A2 வில் உள்ள மொத்த இடமும் கையகப்படுத்தப்பட்டு புறவழிச்சாலையாக உள்ளது, தற்போது அந்த இடத்தில் 1 அடி கூட நிலம் கிடையாது என்றால் சரியல்ல. எனக்கு உள்ள 13 1/3 செண்ட் முழுமைக்கும் நான் இழப்பீடு தொகை பெற்று கொண்டுவிட்டேன் என்றால் சரியல்ல. நான் இழப்பீடு பெற்று கொண்டதற்கான ஆவணங்களையும், வங்கி கணக்கு புத்தகத்தையும் தாக்கல் செய்ய முடியும். எனது பிராதில் சொத்து விபரத்தில் எனக்குண்டான 38 ச.மீ போக எவ்வளவு நிலம் உள்ளது என குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன்.

**1,2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

**(முடிவு நேரம்– 13.56)**